143

'அசோகா' இலவச வெளியீடு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JAN 1957
143
1-57

ௐ

ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரஸ்வாமி துணை.

# ஸ்ரீ தர்மஸ்தலம்.

ஸ்தல வரலாறும், மஹிமையும்.

"பாஸ்கரன்"

தா, -: :- தர்மஸ்தலம்.

Q23:38·2ௐ16·Tr
N56
113083

143
1-57
M. K. KRISHNA CHETTY
ASOKA BETELNUT FACTORY
JAIL ROAD, COIMBATORE

உ

ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரஸ்வாமி துணை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JAN 1957
MADRAS

# ஸ்ரீ தர்மஸ்தலம்.

ஸ்தல வரலாறும், மஹிமையும்.

முதல் பதிப்பு : : 1956

"பாஸ்கரன்"

வானப்பிரஸ்தா, :: தர்மஸ்தலம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
113083
EGMORE, MADRAS-8

# பொருளடக்கம்.

1. க்ஷேத்திர அமைப்பு.

2. பரம்பரை வம்சாவளியும்
கோயில் உற்பத்தியும்.

3. கோயில் அலுவல்கள்
பூஜை கிரமங்கள்.

4. க்ஷேத்திரம் என்ருல் என்ன.

5. யாத்ரீகர்களுக்கு சௌகர்யங்கள்.

6. ஸர்வதர்ம சம்மேளனம்.

7. தீர்த்த யாத்திரையும் பயனும்,

O 23:38 . 21316 - T8
N56

ௐ

# முகவுரை.

இப்புராதன க்ஷேத்திரம் புராண சம்மந்தப்பட்ட ராமாயணம், மஹாபாரதம், பாகவதம் முதலியவைகள் காலங்களில் சம்மந்தப்பட்டதாகவோ, பிறகு வஸிஷ்டர் விஸ்வாமித்ரர் முதலிய மஹரிஷிகள் காலங்களில் சம்மந்தப் பட்டதாகவோ இருக்கவில்லை யாயினும் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன் இக்ஷேத்திரம் தெய்வீக சக்திக்குட் பட்டு, தெய்வீக சக்தி பொருந்தின தர்ம தேவதைகள், இக்ஷேத்திரத்தின் அதிபதியான ஸ்ரீமான் ஹெக்கடே அவர்களை தங்கள் கர்த்தாவாகக் கொண்டு இஸ்தலத்தை நிர்மாணித்தது மல்லாமல் அவர் மூல்யமாகவே தெய்வீக கார்யங்களை நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகையி னாலே க்ஷேத்திரத்தைப் பற்றி எழுதும் போது, ஒவ்வொரு ஹெக்கடே அவர்கள் வாழ்நாளைப் பற்றியும், அவர்கள் காலத்தில் நடந்த விசேஷங்களைப் பற்றியும் எழுத வேண் டியது இன்றியமையாததா யிருக்கிறது.

கன்னடம் அல்லது ஆங்கிலம் தெரியாத பல்லாயிரக் கணக்கான தமிழ் தேசத்தைச் சேர்ந்த யாத்ரீகர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, ஆங்கில பாஷையில் அச்சிடப் பட்டிருந்த க்ஷேத்திரத்தைப் பற்றிய பிரதியிலிருந்து சில விபரங்களும், தற்காலம் தர்மஸ்தல அதிபதியாயிருக்கும் ஸ்ரீமான் ரத்தினவர்மா ஹெக்கடே அவர்களைக் கேட்டு சில விபரங்களும் ஆக கிடைத்த விபரங்களை தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து சிறிய புஸ்தகமாக அச்சிட்டு ஸ்ரீ மஞ்சு நாதேஸ்வரஸ்வாமி அனுக்ரஹத்தாலும், ஸ்ரீமான் ரத்தின வர்மா ஹெக்கடே அவர்கள் ஆசியினாலும் உதவியாலும், அன்னாரின் உத்திரவின் பேரிலும் வெளியிட்டிருக்கின்றேன்.

மொழி பெயர்ப்பிலும் நடை வசன பாவனைகளிலும் பிழைகள் இருக்கலாம். அவைகளை பொருட் படுத்தாது சாராம்சத்தை மட்டும் கிரஹித்துக் கொண்டு பயனை யடையு மாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். முக்கியமான பிழைகள் மட்டும் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டால் அடுத்த வெளியீடுகளில் திருத்திப் பிரசுரிக்க உதவியாயிருக்கும். இக்ஷேத்திரத்தைப் பற்றி தமிழ் மொழியிலே அச்சிடுவது இதுதான் முதல் தடவை. அந்தத் தொண்டு எனக்குக் கிடைத்ததைப் பற்றி மனமகிழ்ச்சி யடைகின்றேன். தமிழ் பெருங்குடி மக்கள் இப்புண்ணியக் க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்யவும், இக்ஷேத்திரத்தைப் பற்றி ஒரு சிறிதளவேனும் தெரிந்து கொள்ளவும் இவ் வெளியீடு உதவி யளிக்குமென மனப்பூர்வமாக நம்புகிறேன்.

பாஸ்கரம் சேஷாச்சாரியர்

வானப்பிரஸ்த ஆஸ்ரமம்,

தர்மஸ்தலம்.



ஸ்ரீமான் ரத்தினவர்மா ஹெக்கடே அவர்கள்.

# ஸ்ரீ தர்மஸ்தலம்.

——: :——

ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திரம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மைசூர் (கர்னுடக) ராஜ்யத்திலே தென் கன்னடம் ஜில்லாவில் பெல்த்தங்கடி என்ற தாலூக்காவிலே உள்ளது. தென்னிந்திய இரும்புப் பாதையைச் சேர்ந்த மங்களூர் என்ற ஸ்டேஷனிலிருந்து கிழக்கே சுமார் 46 மைல் தூரத்திலும் மங்களூர் சார்மாடிக்காட் என்ற ரஸ்தாவிலிருக்கும் "உக்ரே" என்ற ஊரிலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலும் உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலேக்கும், அரபிக் கடலுக்கும் மத்தியிலே இருக்கும் குறுகிய நிலபாகமாகிய பரசுராம க்ஷேத்திரம் என்று சொல்லக்கூடிய புண்ணிய பூமியில் திலகம் போன்றது தர்மஸ்தலம்.

இந்த க்ஷேத்திரத்தைச் சுற்றிலும் சிறு சிறு மலேக் குன்றுகளும் நதிகளுமிருக்கின்றன. வடபாகத்தில் ஓடும் நதிதான் முக்கியமான புண்ணிய தீர்த்தம். இதற்கு நேத்ராவதி என்று பெயர். உயர்ந்த மரங்கள் அடங்கிய அடர்ந்த காட்டுப் பிரதேசத்தின் மத்தியில், இக்ஷேத்திரம் ரமணீயமான இயற்கை காக்ஷிகளிடையே அழகாக அமைந்திருக்கிறது. அதிக ஜனப் பழக்கமில்லாத ஒரு சிறு கிராமத்தைப் போலிருக்கிறது. இங்கு வசிப்பவர்கள் பெரும்பாலோர் தேவஸ்தானத்தில் வேலே செய்பவர்களும், தேவஸ்தான

சம்பந்தப்பட்ட ஜமீன் தோட்டங்கள் இவைகளில் வேலை செய்பவர்களும், மற்றபடி கடைகள் வைத்துக் கொண்டு வியாபாரம் செய்பவர்களுமே யாவர். சீதோஷ்ணம் வெய்யில் காலத்தில் அதிக வெயிலும், குளிர் காலத்தில் அதித குளிரும், மழை காலத்திலே மத்யம மாகவுமிருக்கும்.

இங்கே விளையும் தானியங்கள், நெல், தேங் காய், பாக்கு இவைகளே. மற்ற தேவையான இதர பொருள்கள், சமீபத்திலுள்ள மங்களூர், பண்ட்வால், சிக்மக்களூர் முதலிய நகரங்களிலிருந்து தருவித்துக் கொள்ளப் படுகிறது.

மங்களூர், கார்கால், புத்தூர், சிக்மக்களூர், ஹாசன், கடூர் முதலிய இடங்களிலிருந்து பஸ் சர்வீஸ் நிறைய வருகின்றன. இந்தியாவின் எப்பாகத்தி லிருந்தும் இக்ஷேத்திரத்திற்கு ரயில் மார்க்கமாயும், பஸ் மார்க்கமாயும் கஷ்டமின்றி வரலாம்.

தர்மஸ்தலம் என்றால் தர்மங்கள் நடக்கும் ஸ்தலம் என்று பொருள். பெயரளவில் மட்டுமின்றி கிரியாம்சயிலே இக்காலத்தில் பிரதி தினமும் தர்ம காரியங்கள் நன்கு தடையின்றி நடந்து கொண்டு வருகிறது. இக்ஷேத்திரத்தைக் கருணமூர்த்திகளான தர்மதேவதைகள் "எள்ளுக்குள் எண்ணெய்" போல காத்துவருவதால், யாத்ரீகர்கள் ரொம்பவும் பய, பக்தி சிரத்தையுடனும் ஆசார விசார சுத்தம், ஒழுக்கம், பரிசுத்த மனப்பான்மையுடனும் இங்கு இருக்க வேண்டும். கர்னடகப் பிராந்தியத்திலே

அநேகர் இக்ஷேத்திரத்தின் பூரா பெயரையும் சொல்லக்கூட பயப்படுவார்கள். சிலர் "ஸ்தலம்" என்றும், மற்றும் சிலர் "நதிக்கு அப்புறம்" என்றும் சொல்வதுண்டு. எங்கு பார்த்தாலும் தெய்வீக உணர்ச்சியும், சாத்வீகமான பாவனைகளும், தூய பரிசுத்த காட்சிகளும் நிறைந்திருக்கும்.

இக்ஷேத்திரத்துக்கு சொந்தக்காரரும் அதிபதியுமான ஸ்ரீமான் ஹெக்கடே அவர்கள் தர்மதேவதைகளின் பிரதிநிதியாகையாலும், ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரஸ்வாமியின் அனுக்ரஹத்திற்கும் கருணைக்கும் பாத்திரமானவரான படியாலும், ஸதா ஸர்வகாலமும் பல வகையில் அவன் தொண்டையே செய்து கொண்டு வருவதாலும் அவர் ஸ்தானமும் இக்ஷேத்திரத்தில் ரொம்ப முக்யத்துவமும், சக்தியுடையனதுமானது. அவர் வாயிலிருந்து வரும் வார்த்தைகள், ஆசிகள், தெய்வீக சக்தி பொருந்தினவை. இக்ஷேத்திரத்திற்கு வரும் யாத்ரீகர்கள், க்ஷேத்ரவாஸம், ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரஸ்வாமி தர்சனம், நேத்ராவதி ஸ்நானம் செய்வது மல்லாது ஸ்ரீமான் ஹெக்கடே அவர்களையும் தரிசித்து அன்னார் ஆசியையும் பெற்றுச் செல்ல வேண்டும். இது க்ஷேத்திர பத்ததி. தொன்று தொட்டு நடந்துகொண்டு வரும் சம்பிரதாயமான வழக்கம்.

# கோயில் உற்பத்தியும் பரம்பரை வம்சாவளியும்.

இக்ஷேத்திரத்தின் பழைய பெயர் "குடுமபுரம்" என்றிருந்தது. புராதன காலத்திலிருந்தே இது ஒரு ஜெயினத் தலைவரின் ஆதிக்கத்துக்குட்பட்டு வந்து கொண்டு இருக்கிறது. இங்கே பல மஹான்கள், ஞானிகள், சித்த புருஷர்கள் தபம் செய்து மோக்ஷ மடைந்ததால் இக்ஷேத்திரத்திற்கு ஒருவிதமான தெய்வீகத் தன்மையும், சக்தியுமேற்பட்டது. சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் பரமண்ண ஹெக்கடே, தேவம்மா பெல்லால்த்தி என்பவர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள்.

இவர்கள் காலத்தில் சில தெய்வீக புருஷர்கள் யானை, குதிரை இவைகளின் பேரில் ஏறிக்கொண்டு வடகிழக்கு திசையிலிருந்து ஸ்ரீமான் ஹெக்கடே அவர்கள் வாசம் செய்து கொண்டிருக்கும் "நெல்லியாடிபீடு" என்ற இடத்திற்கு வந்தார்கள். ஹெக்கடே அவர்கள் வழக்கம் போல வந்த அதிதிகளுக்கு வேண்டிய உபசாரம் செய்து, என்ன தன்னாலாக வேண்டுமென அவர்களிடம் வேண்டிக் கேட்டுக்கொண்டார். மனித வேஷத்தில் வந்த தெய்வீக புருஷர்கள் ஹெக்கடே அவர்களின் மனதை சோதிப்பதற்காக

அன்ஞர் வாசம் செய்து கொண்டிருக்கும் "நெல்லியாடிபீடு" என்ற இடத்தை தங்களுக்கு கொடுத்து விடும்படியும், அதில் தாங்கள் வசிக்கப் போவதாயும் கேட்டனர்.

இது ஹெக்கடே அவர்களுக்கு கொஞ்சம்கூட எதிர்பாராத கோரிக்கையாக தோன்றிய போதிலும், இவர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல, தெய்வீக புருஷர்கள் என்பதை ஊஹித்துக் கொண்டு அவர்கள் கேட்டபடி நெல்லியாடிபீடுவை அவர்களுக்குக் கொடுத்து, மேற்கொண்டு நடக்க வேண்டிய எல்லா காரியங்களுக்கும் தான் உதவி செய்ய தயாராயிருப்பதாயும் வாக்குறுதி கொடுத்தார்.

இது தெய்வீக புருஷர்களுக்கு அபரிமிதமான சந்தோஷத்தை அளித்தது. ஹெக்கடே அவர்களின் தியாக மனப்பான்மைக்கும், தாராள ஹிருதயத்திற்கும் வெகுவாகப் புகழ்ந்து ஹெக்கடே அவர்களிடம் கீழ் கண்டவாறு ஆஞ்யாபித்தனர் :-

"ஹெக்கடே அவர்களே, நாங்கள் மஹேஸ்வரனின் கட்டளைக்குட்பட்ட தர்மதேவதைகள். எங்களால் அநேக விதமான அபூர்வ காரியங்கள் சாதிக்க முடியும்."

"இக்ஷேத்திரத்தை ஒரு பெரிய புண்ணிய ஸ்தலமாகவும், சுற்றுப்புற மிருக்கும் கிராமவாசிகள் இதை சிறந்த பயபக்தியுடன் நோக்கும்படிக்கும் செய்யப் போகின்ருேம். அவரவர்கள் பக்தி சிரத்

தைக்கு தகுந்தபடி அவரவர்கள் கோரிக்கைகளும் பிரார்த்தனைகளும் மனோபீஷ்டங்களும் நிறைவேற நாங்கள் உதவி செய்வோம். அதற்கு பக்தர்கள் ஏராளமாக "ஹரிக்கை காணிக்கை" கொண்டுவந்து உங்களுக்குச் செலுத்த நாங்கள் பக்தாதிகள் மூல்யம் பிரயத்தனப் படுவோம். எங்கள் ஐஸ்வர்யத்தை யாரும் அளவிட முடியாது. உங்களை எங்கள் முக்கிய பிரதிநிதியாக நியமிக்கிறோம். உங்கள் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் பலிதமாக நாங்கள் உங்களுக்கு அபூர்வ சக்தியைத் தருகிறோம். பக்தர் களின் அநேக விதமான துயரங்கள், குறைகள், கஷ்ட ங்கள் எல்லாம் நிவர்த்தியாவதிலிருந்து, இக்ஷேத்தி ரத்தின் புகழ் பலவிடங்களிலும் பரவி இதன் கீர்த்தி உயரப் போகின்றது. நீங்கள் கடவுளின் உண்மை பக்தனாயிருந்து, அவன் ஸேவைகளை சரியாக செய்து கொண்டு வந்தால் உங்களுக்கு நீண்ட ஆயுளும் ஐஸ்வரியமும் கொடுப்பது மல்லாமல் உங்களை எங்கள் அருமைக் குழந்தையைப் போல் காத்துவருவோம். இந்த கைங்கர்யத்திற்கு உங்களுக்கு உதவி செய்வதற் காக நான்கு நபர்களை ஏற்படுத்திக் கொள்ளவும். வரும் யாத்ரீகர்களுக்கு வேண்டிய் ஆகார வசதி, இட வசதி, மற்ற தேவையான வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கவும்.

"ஜெயினபஸ்தியிலிருக்கும் ஸ்ரீ சந்திரநாத ஸ்வாமி ஸேவைகளையும் சரியானபடி செய்து வரவும். இவைகள் எல்லாம் நாங்கள் சொல்லியபடி செய்யத் தவறினால், அதன் தோஷம் உங்களை பாதித்து,

நீங்கள் துயரத்தை அனுபவிக்கும்படி நேரும். உண்மையான பக்தியுடனும், சிரத்தையுடனும் ஆண்டவனுக்கும், எங்களுக்கும் பக்தாதிகளுக்கும் ஸேவை செய்தால் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து போதுமான ஐஸ்வர்யத்தை கொண்டு வந்து கொடுப்போம். மனம் தளர வேண்டாம். தைரியமாகவும், பயமில்லாமலும் பணியாற்றுவீராக.''

மேற்கண்டவாறு சொல்லிவிட்டு தர்மதேவதைகள் மறைந்து விட்டனர். இவைகளைச் செவியுற்ற ஹெக்கடே அவர்கள் ஆச்சரியமும் ஆனந்தபரவசருமாயினர். சில சமயமான பிறகு தர்மதேவதைகள் ஹெக்கடே அவர்களின் கனவில் தோன்றி கீழ்கண்டவாறு ஆஞ்யாபித்தனர் :-

"நாங்கள் மறைந்துவிட்ட போதினும் இங்கேயேதான் வசித்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் வசிப்பதற்காக நெல்லியாடிபீடில் ஒரு கட்டிலும் ஊஞ்சலும் வைத்து "பஞ்சபர்வம்'' என்ற சடங்கை சரிவர நடத்திக் கொண்டு வரவும். நீங்கள் குடியிருப்பதற்காக "பீடு'' ஒன்று நாங்கள் குறிப்பிடு மிடத்தில் கட்டிக் கொள்ளவும். எங்களுக்காகவும் நாங்கள் குறிப்பிடு மிடத்தில் கோயில்கள் கட்டவும்,''

"அம்மன் கன்யாகுமரிக்கும் ஆலயம் கட்டவும். நாங்கள் விரும்பும் இவைகளை யெல்லாம் சரிவர செய்து வைத்தால் உங்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் செய்து கொடுக்க நாங்கள் எப்போதும் உங்களுக்குத் துணையாக யிருப்போம். நீங்கள்

தேவையான சமயத்தில் எங்களைக் குறித்து தியானம் செய்யவும். நாங்கள் உங்கள் குறைகளை தீர்த்து வைப்போம். எங்கள் சார்பில் உயர்ந்த மதத்தைச் சேர்ந்த இரண்டு நபர்களை நியமிக்கவும். உங்களுக்குச் சொல்லவேண்டிய விஷயங்களை அவர்கள் மூல்யம் சொல்லி வருகிறோம். சில முக்கியமான விஷயங்களைப் பற்றி மட்டும் எங்கள் தலைவரான அன்னப்பாவின் மூல்யம் தெரியப்படுத்துவோம். பக்தியுடனும் சிரத்தை யுடனும் நடந்து கொள்ளவும்.''

ஹெக்கடே அவர்கள் தர்மதேவதைகள் ஆஞ் யாபித்தபடி அடுத்த தினமே ஆலயங்கள் கட்ட ஆரம்பித்து விட்டார். சில தினங்கள் கழித்து தர்ம தேவதைகள் அசரீரிவாக்கு மூல்யமாய் அடியில் கண்டவாறு ஆஞ்யாபித்தனர் :-

"அம்மன் கன்யாகுமரியின் சன்னதிக்குப் பக்கத்தில் ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யவும்; காசியிலிருந்து கொண்டுவரப்பட்டு இப்போது மங்க ளூரிலிருக்கும் கதிரே க்ஷேத்திரத்திலிருக்கும் ஸ்ரீமஞ்சு நாதேஸ்வர லிங்கத்தை நாங்கள் கொண்டு வந்து தருகிறோம்.''

அதே பிரகாரம் ஒரு நாள் தர்மதேவதைகள் சொன்ன இடத்திலேயே ஒரு அழகான லிங்கம் பிரதி ஷ்டை செய்திருப்பதைக் கண்டு ஹெக்கடே அவர்கள் ஆச்சர்ய மடைந்தார்கள், அந்த இடத்திலே ஆலயம் கட்டி, ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரர், தர்மதேவதைகள் இவர் களின் நித்திய பூஜை ஸேவை முதலிய காரியங்களுக்

காக தன் சொந்த ஆஸ்தியிலிருந்து சிலபாகம் ஒதுக்கி வைத்தார்.

அன்று முதல் ஸ்வாமி சன்னதியில் கிரமப்படி பூஜை முதலியவைகள் நடைபெற ஆரம்பித்தன. க்ஷேத்திரத்தின் பிரதாபம் பலபாகங்களிலும் பரவ ஆரம்பித்தது. ஜனங்கள் தினே தினே ஏராளமாக வந்து ஸ்வாமியை தரிசித்து, பக்தியை செலுத்த ஆரம்பித்தார்கள்.

பல ஹெக்கடேக்கள் இதே பிரகாரம் இந்த க்ஷேத்திரத்தை நல்ல முறையில் ஆண்டு சென்றனர். ஹெக்கடே அவர்களின் சம்பிரதாயப்படி தந்தைக்குப் பிறகு மகனே பட்டத்துக்கு வரவேண்டியவனுகின்ருன் மகன் இல்லை என்ருல் " தத்து " எடுத்துக் கொள்ளுவதுண்டு. தந்தைக்குப் பிறகு மருமகன் பட்டத்துக்கு வரும் வழக்கம் கிடையாது. இம்முறையே தொன்று தொட்டு இன்றுவரை அனுசரிக்கப்பட்டு வருகிறது.

1354-ம் ஆண்டில் பத்மைய்ய ஹெக்கடே என்பவர் ஆண்டுவந்த காலத்தில் இவ்வூருக்கு சமீபத்திலிருக்கும் " கல்லேரி " என்ற இடத்தில் கல்லேரித்தாயா என்ற பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர் வசித்து வந்தார். ஏதோ சரீர சம்மந்தப்பட்ட தொந்தரவினுல் பிராணஹத்தி செய்துகொண்டு பூதருபமாக ஸ்வாமியின் சன்னதிக்கு எதிரில் வசிக்கும்படி ஏற்பட்டது. இதை அறிந்த ஹெக்கடே அவர்கள் அந்த பூதத்துக்கு தேவஸ்தான் வெளி பிராகாரத்தில் ஒரு இடத்தில் இருக்கச் சொல்லி அதற்கு வேண்டிய பூஜைகளையும்

சரிவர செய்துவந்தார். அது முதல்கொண்டு அன்னப்பஸ்வாமியும், கல்லேரித்தாயும் முக்கியமான பூத தெய்வங்களாய் பக்தாதிகளின் பலவிதமான குறை, தொந்திரவுகள் முதலியவைகளை யெல்லாம் நிவர்த்தி செய்துகொண்டு வருகின்றனர்.

இக்ஷேத்திரத்தில் ஒரு முக்கியமான விசேஷம் என்னவெனில், துஷ்ட கிரஹங்களினுல் துன்புறுத்தப் பட்டவர்கள், காற்றுசேஷ்டைகளினுல் அவஸ்தை படுபவர்கள், பேய், பிசாசு, பிரும்மராக்ஷசு முதலியவை களால் பீடிக்கப்பட்டவர்கள், பையித்தியம், மூளை கெட்டு தடுமாறுதல், தீராத வியாதிகளினுல் அவஸ் தைப்படுபவர்கள், புத்திரசந்தான மில்லாமல் துய ருடையவர்கள், மற்றபடி குடும்பகிலேசம், வியாபார சம்பந்தமான நஷ்ட கஷ்டங்கள் உடையவர்கள் எல் லோரும் வந்து புண்ணிய நதியில் ஸ்நானம் செய்து ஸ்ரீமஞ்சுநாதஸ்வாமியையும், தர்மதேவதைகளையும் தரிசித்து, ஹெக்கடே அவர்கள் நியமித்தபடி நடந்து கொண்டால், அவரவர்கள் யோக்கிதைக்கும், பக்தி சிரத்தைக்கும் தகுந்தபடி பரிகாரம் கிடைத்துக் கொண்டு வருகிறது.

பத்மைய்ய ஹெக்கடே அவர்களுக்கு சந்ததி இல்லை. தன் சகோதரி குமாரனை சந்திரய்யாவை தத்து எடுத்துக்கொண்டு தனக்குப்பின் அவர் பட்டத் துக்கு வரவேணுமாய் நியமித்தார், 1354ம் ஆண்டி லேயே பத்மய்ய ஹெக்கடே காலமானுர். ஸ்வீகார குமாரனை சந்திரய்யா ஹெக்கடே பட்டத்துக்கு வந்தார்.

இவர் காலத்தில் கோயில் பூஜை கிரமங்களும் அலுவல்களும் அதிகரிக்கப்பட்டன. இவர் ஸ்ரீமஞ்சு நாதஸ்வாமியின்பால் அபாரமான பக்தி கொண்டிருந்தார். தனக்கு வந்த ஒரு கொடிய வியாதியை அவன் தீர்த்துவைத்ததால், பக்திப் பரவசராகி ஸ்வாமிக்கு தங்கத்தில் நாகாபரணம் என்ற ஆபரணத்தை செய்து சமர்ப்பித்தார். இது 1402ம் வருஷம் நடந்தது. இவர் 1425ம் ஆண்டில் காலமானர்.

இவர் காலமான பிறகு இவருடைய தங்கை மகனுன தேவராஜ ஹெக்கடே பட்டத்துக்கு வந்தார். இவர் காலத்தில் 1435ம் ஆண்டில் உடுபி ஸோதை மடத்தைச் சேர்ந்தவரும், மடாதிர்வருமான ஸ்ரீவாதி ராஜஸ்வாமிகள் இக்ஷேத்திரத்திற்கு விஜயம்செய்து, பகவானை தன் மனதிச்சைப்படி கிரமப்படி பூஜித்து ஆனந்த பரவசராயினர். இக்ஷேத்திரத்தில் நடக்கும் தான தர்மாதிகளையும், ஹெக்கடே அவர்களின் தூய மனப்பான்மைக்கும் மெச்சி இது நிஜமாகவே தர்மம் குறைவின்றி நடக்கும் ஸ்தலம் என்று வாயாரப் புகழ்ந்து சொன்னர். அன்று முதற்கொண்டு இக்ஷேத்திரத்தை எல்லோரும் "தர்மஸ்தலம்" என்றே அழைக்கலாயினர்.

தேவராஜ ஹெக்கடே அவர்கள் காலமானவுடன் அவருக்குப் பிறகு மஞ்சய்ய ஹெக்கடே என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் 33 வருஷகாலம் ரொம்பவும் விமரிசையாக ஆண்டு சென்றனர். இவருக்குப் பிறகு கிரமப்படி முறையே, ஜினப்ப ஹெக்கடே, சந்தைய்ய ஹெக்கடே, தேவம்பராஜ

ஹெக்கடே, அனந்தய்ய ஹெக்கடே முதலியவர்கள் பட்டத்துக்குவந்து ஆண்டு காலஞ்சென்றனர். இவர் களுக்குப் பிறகு ரிஷபய்ய ஹெக்கடே, தம்மண்ண ஹெக்கடே, வரதய்ய ஹெக்கடே முதலியவர்களும் பட்டத்துச்குவந்து ஆண்டு காலஞ்சென்றனர்.

பிறகு சந்திரய்ய ஹெக்கடே என்பவர் பட்டத் துக்கு வந்தார் இவர் 27 வருஷகாலம் ஆண்டனர். இவருக்கு சந்ததி இல்லை. மங்களூருக்கு சமீபத்தி லிருக்கும் "கூளூர்" பீடுவைச் சேர்ந்த குமரய்ய ஹெக்கடே என்பவரை தத்து எடுத்துக் கொண்டார். இங்கு இவர் பட்டத்துக்கு வந்ததும் கூளூர்பீடு பட்டத்துக்கு சரியானவர்கள் யாரும் இருக்கவில்லை. தன் சகோதரியை மூபெத்ரி பத்ரய்ய ஷெட்டி என்ப வருக்குத் திருமணம் செய்வித்து அன்னாரை கூளூர் பீடு பட்டத்தில் அமர்த்தினர். மேல்பார்வை குமரய்ய ஹெக்கடே அவர்களே நடத்திக் கொண்டு வந்தார். அவர் காலமான பிறகு கூளூர் பீடு தனியாய்விட்டது. சில கோர்ட்டு விவஹாரங்களும் நடந்தன. இன்றைக் கும் இக்ஷேத்திரத்திற்கு கூளூரில் சில சொத்துக்கள் இருக்கின்றன.

குமரய்ய ஹெக்கடே என்பவர் ரொம்பவும் பரா க்கிரமசாலி. மல்யுத்த வீரர். அநேக மல்யுத்த வீரர் கள் இவருடன் இருந்தார்கள். அக்காலத்தில் மைசூ ரை ஆண்டுவந்த டிப்பு சுல்தானும் பிறகு வந்த ஈஸ்ட் இந்தியா கம்பெனியாராலும் ரொம்பவும் அமோ கமாக பாராட்டப்பட்டார்கள். இவர் காலத்தில் அநேக இடங்களில் சொத்துக்கள் வாங்கப்பட்டன. கர்னாடக

பிராந்தியம் பூராவும் விஜயம் செய்து கம்பீரமான முறையிலும் சகல பரிவாரங்களுடனும் சஞ்சாரம் செய்து தர்மஸ்தலத்தின் புகழையும், கீர்த்தியையும் பரவச் செய்தார். இவர் பிரக்யாதி கேழ்விப்பட்ட மைசூர் மகாராஜன் ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் இவரை தன் அரண்மனைக்கு வரவழைத்து பல ராஜ மரியாதைகளை வழங்கினர்கள். புகழ்பெற்ற தர்மஸ்தல "தசாவதார ஆட்டம்" என்ற நாடகம் நடிக்கும் கலைஞர்களை சிலகாலம் அவர் மைசூரிலேயே வைத்துக் கொண்டிருந்தார். அன்று முதல் மைசூர் ராஜ்யத்தில் இத் தசாவதார நாடகம் பிரபலமாயிற்று. குமரய்ய ஹெக்கடே அவர்களின் வேண்டுகோளின்படி "கப்பலு" என்ற கிராமத்தை மைசூர் அரசர் "ஸ்ரவண பெலகோலா" மடத்திற்கு சாஸனம் செய்து கொடுத்தார். குடவு ராஜ்யம் விஜயம்செய்தார். அங்கு ஆண்டுவந்த வீரராஜேந்திரனுல் நன்கு கௌரவிக்கப்பட்டு பல ஆயுதங்கள் பரிசாகவும் அளிக்கப் பட்டன.

வீரராஜேந்திரன் தன் குடும்பத்துடன் தர்மஸ்தலம் விஜயம் செய்து ஸ்வாமியை தரிசித்தார்கள்.

மைசூர் அரசர் ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையாரும் தன் முன்னோர்களைப் போல ஸ்ரீமஞ்சுநாதஸ்வாமியின் பரம பக்தரானர். இவர் தைரியமும் பராக்ரமும் இவர் வசமிருக்கும் வீரர்களின் கூட்டமும் கண்டு மெச்சி ஆங்கிலேயர்கள், ஜமால்பாத் என்ற கோட்டையை பிடிக்கவும் அங்கு நடந்துவரும் கலகங்களை யடக்கவும் இவருடைய உதவியை நாடினர். இந்த சம்பவத்தி

லிருந்து தர்மஸ்தலத்தின் கீர்த்தி வெகுவிரைவில் பரவ ஆரம்பித்துவிட்டது. முப்பது வருஷகாலம் ஆட்சிசெய்து விட்டு 1830ம் ஆண்டில் இவர் காலமானுர்.

இறப்பதற்குமுன் இவருக்குச் சந்ததியில்லை யாகையால் சந்திரய்யா, மஞ்சய்யா என்ற இரண்டு சமீப பந்துக்களின் குமாரர்களை தத்து எடுத்துக் கொண்டார். இவர் காலமான உடன் சந்திரய்யா என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் காலத்தில் கோயில் உள்புறம் எல்லாம் ஜீர்ணோத்தாரணம் செய்து வைத்தார். 1849ம் ஆண்டில் இவர் காலமானுர் இவருக்குப் பிறகு மஞ்சைய்ய ஹெக்கடே என்பவர் பட்டத்துக்கு வந்தார்.

இவர் காலத்தில் பிராமணர் சாப்பிடும் சத்திரம், கோயில் வெளி பிராகாரம், ஸ்ரீசந்திரநாதஸ்வாமி பஸ்தி, ஜமாஉக்ராணம் இவைகள் எல்லாம் சரியான வகையில் மராமத்து செய்யப்பட்டன. தேவஸ்தானத் திற்காக அநேக வண்டிகளும், கோயிலுக்காக சில தங்க பிரதிமைகளும் செய்யப்பட்டடன. பிரும்மகலசா பிஷேகம் என்ற அபிஷேகத்தை ஸ்வாமிக்கு உயர்ந்த முறையில் செய்துவைத்தார். இவர் காலத்தில் மூன்று மஹாநடாவளிகள் நடத்தப்பட்டன. நடாவளி என் பது தர்மதேவதைகளுக்காக நடத்தப்படும் உத்ஸவம். கோயில் பூஜை கிரமங்களும் அதிகரிக்கப்பட்டன. கோயில் நிர்வாகமும் ஒழுங்கான முறையில் அமைக் கப்பட்டு நடத்தப்பட்டது. 45 வருஷகாலம் கீர்த்தி யுடன் ராஜ்யபாரம் செய்துவிட்டு 1895ம் ஆண்டில் காலமானுர்.

தர்மபால் ஹெக்கடே என்பவர் பிறகு பட்டத்துக்குவந்தார். கொஞ்ச காலத்திற்குள் இவர் இறந்துவிட்டபடியால் இவருக்கும் சந்ததி இல்லை. இவர் தாயார் குடும்ப சம்பிரதாயப்படி தன் பந்துக்களின் குமாரர்களான சந்திரய்யா, மஞ்சைய்யா என்ற என்ற இரண்டு பிள்ளைகளை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டனர். அவர்களின் மூத்தவனை சந்திரய்யா ஹெக்கடே பட்டத்துக்கு நியமிக்கப்பட்டார். மேஜர் ஆகாமலிருந்ததால் இவர் தாய் மாமனை விட்டலாவைச் சேர்ந்த பத்ம ஷெட்டி என்பவரை மைனர் கார்டியனாக நியமித்து அவரும் முண்டாஜ்நந்தியைச் சேர்ந்த பத்மனப பட் என்பவருமாக சேர்ந்து பரிபாலனம்செய்து வந்தார்கள். இந்த சமயத்தில், தர்ம தேவதைகளுக்கு கோயில்கள், வரும் யாத்ரீகர்கள் தங்குவதற்காக ஒரு நீளமான பெரிய சத்திரம் கட்டப்பட்டன. மேஜராகி பட்டம் 20 வருஷகாலம் வகித்து வந்தார். இவர் காலத்தில் பஸ்தியிலிருக்கும் ஸ்ரீசந்திரநாதஸ்வாமி கோயில், மராமத்து செய்யப்பட்டது. பஞ்சகல்யாணம் என்ற உத்ஸவத்தை வெகு அழகான முறையில் நடத்தினர். தர்மதேவதைகளுக்காக மஹாநடாவளி ஒன்றும் நடத்தினர். குடி தண்ணீருக்காக குழாய்களும். ஏற்படுத்தினர். ஜமாஉக்ராணமும் மராமத்து செய்யப்பட்டது. 1918ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இவர் காலமானர். இவர் காலமான சமயம் இவருக்கு சிலமாதங்களான ஓர் ஆண்குழந்தை யிருந்தது. இளைய ஸ்வீகாரரான மஞ்சைய்ய ஹெக்கடே என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் ஸ்ரீ மஞ்சுநாதஸ்வாமியின் பேரில் ரொம்பவும்

பக்தி கொண்டிருந்தார். வரும் யாத்ரீகர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் ஏற்படுத்தினர். இலவச ஆஸ்பத்திரி, கிராம கௌன்சில் முதலியனவைகள் எல்லாம் ஏற்படுத்தினர். அழகான வேலைப்பாடு களுடன் அமைந்த ஒரு மர ரதமும் தயார் செய்யப் பட்டது.

கோயிலுக்காக தங்கத்தில் விக்ரஹம் ஒன்று தயார்செய்து, சாஸ்த்ரோக்தமாக பிரும்ம கலசாபி ஷேகம் நடத்தி மேற்படி பிரதிமை கோயிலில் ஸ்தா பிக்கப்பட்டது. வெள்ளி பல்லக்கு ஒன்றும் ஸ்வாமி க்கு அநேக ஆபரணங்களும் வாங்கப்பட்டன; தயார் செய்யப்பட்டன. கோயிலுக்காக அநேக சொத்துக்க ளும் வாங்கப்பட்டது. தென்னை, வாழை, பாக்கு இவைகளை அதிவாரியாக நட்டு, தோட்டவிவசாயத்தை பெருக்கி விருத்தி செய்தார். உஜ்ரே என்ற ஊரில், மாணவர்கள் வித்தியாப்பியாசத்திற்காக "குருகுலம்" ஒன்று 1940 ஆண்டில் ஸ்தாபிதம் செய்தார். அதற்கு "சித்தவனம் குருகுலம்" என்று பெயர்.

1932 ஆண்டில் தர்மஸ்தலத்தில் ஸர்வதர்ம ஸம்மேளனம் என்ற மகாநாட்டை ஆரம்பித்து பிரதி வருஷமும் கார்த்திகைமாதம் லக்ஷதீப உத்ஸவத்தின் சமயம் அதை தவருமல் நடத்திக்கொண்டு வந்தார். பலமதங்களைச் சேர்ந்த வித்வான்கள் அழைக்கப்பட்டு அந்தந்த மத தத்துவங்களைப்பற்றி எல்லாம் உபன்யா சங்கள் செய்யப்பட்டு வந்தன. ஆண்டவன் ஒருவனே. வழிகள்பல என்பதை அடிக்கடி ஞாபகமூட்டிக்

கொண்டு வந்தார். சென்னை சட்டசபையில் மெம்பராக யிருந்தார். அநேக மஹாநாடுகளுக்கு தலைமை வகித்தார். கலாபிமானி, தானும் நன்றாக சித்திரம் வரைய வல்லவர். பக்தகோடிகளால் நன்கு மதிக்கப் பட்டார், ஏராளமான தானதர்மங்களைச் செய்தார். இவர் 1955 ஆண்டு ஆகஸ்டுமாதத்தில் ஸ்ரீமான் சந்திரய்ய ஹெக்கடே அவர்களின் ஏக புதல்வனும், பட்டத்துக்கு உரியவருமான ஸ்ரீமான் ரத்தினவர்மா ஹெக்கடே அவர்களை பட்டத்துக்கு நியமித்துவிட்டு காலமாயினர்.

---

## தற்காலம் பட்டத்திலிருக்கும் ஸ்ரீமான் ரத்தினவர்மா ஹெக்கடே

1955 ஆண்டு செப்டம்பர் மாதம் இவருக்கு பட்டாபிஷேக மஹோத்ஸவம் வெகு சிறப்பாக தர்ம ஸ்தலத்தில் நடந்தது. பல்லாயிரக் கணக்காக மக்கள் அக் காக்ஷியைக் கண்டு களித்தனர். இவர் இதற்கு முன் பட்டத்திலிருந்த ஸ்ரீமான் சந்திரய்ய ஹெக்கடே அவர்களின் ஏகபுத்திரன். இவருக்கு இப்போது வயது சுமார் 38 ஆகிறது. இவர் மிகுந்த தெய்வ பக்தியும், தாராள ஹிருதயமும், சமத்துவ மனப்பான் மையுமுடையவர். ஏழை எளியவர்களிடம் பிரீதியும்

பள்ளி மாணவர்களிடம் பற்றுதலும் உடையவர். மனிதனுக்குவரும் சுகதுக்கங்கள் நன்கு உணர்ந்தவர். எளிய வாழ்க்கை வாழ விரும்புகின்றவர். இவர் பட்டத்துக்குவந்த உடனே தெய்வீக தொண்டில் மும்முரமாக ஈடுபட்டு அநேக காரியங்களை ஒரு வருஷ காலத்திற்குள் சாதித்திருக்கிறார்கள். ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வர ஸ்வாமிக்கு வெள்ளி ரதம் கைங்கர்யத்தை பூர்த்தி செய்வித்து சென்ற லக்ஷதீப உத்ஸவ சமயம் ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரஸ்வாமியை அதில் எழுந்தருளப் பண்ணி ரத உத்ஸவத்தை வெகு விமரிசையாக நடத்தினார்கள். பக்தகோடிகள் ஸ்ரீ மஞ்சுநாதனை வெள்ளி ரதத்தில் ஸேவித்து அனுபவிக்கும் அந்த ஆனந்தத்திற்கு அவர் பாத்திரமானார். தர்மஸ்தலத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் "வஸந்த மஹால்" என்ற கலாபவனத்தையும் பூர்த்தி செய்வித்து, சென்றவருஷம் ஸர்வதர்ம ஸம்மேளனம் வெகு சிறப்பான முறையில் அந்த மஹாலில் அவர் நடத்தினர்.

யாத்ரீகர்கள் தங்குவதற்காக அநேக இடவசதிகளும், முக்கியமாக செய்ய வேண்டிய அநேக மராமத்துக்களும் செய்திருக்கிறார். ஸ்தலத்தில் கிலமாகக் கிடந்த அநேக இடங்களை எல்லாம் சீர்திருத்தம் பண்ணி பார்ப்பதற்கு ரமணீயமான முறையில் மராமத்து செய்திருக்கிறார். கோயில் உள்ளேயும் பல சௌகர்யங்கள் செய்திருக்கிறார். முக்கியமாக தர்ம ஸ்தலத்தை நன்றாக அழகுபடுத்தி, வரும் யாத்ரீகர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான வசதிகளும் ஏற்

படுத்தி, ஸ்ரீ மஞ்சுநாதஸ்வாமியின் ஸேவையை வெகு உன்னதமாகச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் உடையவர். பகவான் அவருக்கு தீர்க்க ஆயுளும் ஆரோக்கியமும் அளித்து இவர் மனோபீஷ்டம் பூர்த்தியாக அருள் செய்வாராக!

---

# கோயில் அலுவல்களும் பூஜை கிரமங்களும்.

காலை 5 – 30 மணிக்குள் கோயில் கதவுகள் திறக்கப்படும். பிறகு கிரமப்படி பல அபிஷேகம், வேதபாராயணம், தேவி மஹாத்மியம், ஷடஜபம், ஸஹஸ்ரநாமம் முதலியன பாராயணம் செய்யப்படும். காலை 8 மணிமுதல் மத்யானம் மஹாபூஜையாகும் வரையில் பக்தாதிகள் ஸ்வாமி தர்சனம் செய்யலாம். பஞ்சாம்ருத அபிஷேகம் முதலிய ஸேவைகள் காலை 9 மணிக்குள் ஆரம்பமாகிறது. தேங்காய், பழம் இவைகள் ஸ்வாமிக்கு நைவேத்தியமானவுடன், ஹரிக்கை, காணிக்கை முடிப்பு முதலிய பிரார்த்தனைகள் ஸ்வாமிக்கு செலுத்தப்பட வேண்டும். பக்தாதிகள் தங்கள் மனதில் வேண்டிக் கொண்ட பிரார்த்தனைகளையோ, குறைகளையோ, கஷ்டங்களையோ பகல் மஹாபூஜையாவதற்குள்ளாக ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரஸ்வாமியின் முன்பு தெரிவித்து பிரார்த்தித்துக் கொள்ளவேண்டும்.

பிறகு மஹாபூஜையாகும். பலிபூஜையாகி கோயில் கதவுகள் மூடப்படும். மாலே 5-30 மணிக்கு கோயில் கதவுகள் திறக்கப்பட்டு கிரமப்படி அபிஷேகம், தீவட்டிகேசலாம், முதலியவைகள் ஒன் றன்பின் ஒன்ருக நடக்கும். மாலே வேளேகளில் யாத்ரீகர்கள் ஸ்வாமிக்கு ஸேவை முதலானவைகள் செய்வதற்கில்லே. அது காலே வேளேகளில் மட்டும் தான் செய்யப்படும். மாலே 7 மணிக்கு ஸ்வாமிக்கு மஹாபூஜை நடத்தப்பட்டு சரியாக இரவு 9 மணிக்கு கோயில் கதவுகள் மூடப்பட்டு ஸீல் வைக்கப்படும். உத்ஸவாதி காலங்களில் இந்த கிரமத்தில் மாறு தல்கள் இருக்கும்.

---

## கோயிலுக்குள் செல்லும்போது அனுசரிக்கவேண்டிய முறைகள்.

---

கோயில் உள்பிராகாரத்திற்குச் செல்லும் வாசற்படியில் காவலாளிகள் நிறுத்தப்பட்டிருக்கின் றனர். அவர்கள் உத்தரவை மீறிக்கொண்டு உள்ளே போகக்கூடாது. எந்தெந்த சமயத்தில் யார் யாரை உள்ளே விடவேண்டுமோ அந்த சமயத்தில் அவர்கள் விடுவார்கள். மிகுந்த பயபக்தியுடனும், ஸ்நானம் செய்து தோய்த்து உலர்த்தின தூய ஆடைகள் அணிந்துகொண்டு, நெற்றியில் திலகம் அணிந்து

Q23:38.21316
N56

கொண்டு கோட்டு, ஷர்ட்டு, பனியன் இவைகளை யெல்லாம் கழற்றிவிட்டு துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு, சுத்தபாவனையுடன் உள்ளே செல்ல வேண்டும். உள்ளே செல்லும்போது, ரத்தம், சளைவா எச்சில் முதலியவைகளும் தொத்துவியாதி சம்மந்த மான வியாதியஸ்தர்களும், பேய், பிசாசு, பிடித்தவர் கள், பையத்தியம், வலி முதலியன யுடையவர்களும், சிறு குழந்தைகளும் இவர்கள் எல்லாம் உள்ளே கண்டிப்பாய் போகக்கூடாது. இவர்கள் அனுமதிக்க வும் படமாட்டார்கள். யாத்ரீகர்கள் இதுவிஷயத்தில் ரொம்ப ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டி யது. அத்துமீறி அம்மாதிரி யாராவது உள்ளே சென்று சந்நதியை அசுத்தப்படுத்தி விட்டால் அதற் காக சம்பிரோஷணைசெய்து கலசாபிஷேகம் செய்ய நேரிடும். இதற்காக ஏற்படும் சிலவை யார் அசுத்தப் படுத்தினார்களோ அவர்களிடமிருந்தே வசூல் செய்யப் படும். இச் சிலவை அவர்கள்தான் ஏற்றுக்கொள்ள நேரிடும்.

மற்றபடி தேவையான விஷயங்கள் விபரங்களு க்கு கோயில் வாசலில் இருக்கும் மணியக்காரர் அல்லது பாரபத்தியக்காரர் இவர்களைக் கேட்டு தெரி ந்து கொள்ளலாம். ஸ்வாமிக்குச் செய்யவேண்டிய பெரிய ஸேவைகள் விஷயமாக ஸ்ரீமான் ஹெக்கடே அவர்களிடமே கேட்கவேண்டியது.

உள் பிராகாரத்திற்கு செல்லும் வாசற்படியின் வெளிப்புறத்தில் ஸ்வாமி சந்நதிக்கு எதிரில் ஒரு பெரிய தட்டு அல்லது தாம்பாளம் வைக்கப்படும். ஹரிக்கை,

113083



Q23:38.21
N57

காணிக்கை, முடிப்பு முதலிய பிரார்த்தனை பணங்கள் எல்லாம் இத்தட்டில் சமர்ப்பிக்க வேண்டும். இச் சமயம் ஸ்ரீமான் ஹெக்கடே அவர்களும் வந்து கோயிலுக்குள் தன் பீடத்தில் அமர்ந்திருப்பார். இவருடைய பிரதிநிதிகள் மூவரும் பிரசன்னமாயிருப்பார்கள். பிரார்த்தனை காணிக்கைகளை செலுத்திவிட்டு பக்தாதிகள் தங்கள் தங்கள் கஷ்ட சுகங்களை அச்சமயம் சொல்லிக்கொள்ள வேண்டும். அம்மாதிரி சொல்லிக் கொள்வதற்குமுன் ஸ்வாமிக்கு ஒரு ரூபாய் காணிக்கை தட்டில் சமரபித்துவிட்டு பிறகு குறைகளை சொல்லிக் கொள்ள வேண்டும். அவரவர்கள் குறைகளுக்கு தகுந்த பரிகாரம் சொல்லப்பட்டு ஸ்வாமி பிரசாதம் கந்தம், புஷ்பம், தீர்த்தம் இவைகள் கொடுக்கப்ப்டும்.

ஸ்ரீமான் ஹெக்கடே அவர்கள் பக்தாதிகளின் குறைகளையெல்லாம் தீர்த்துவைக்க ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரஸ்வாமியை பிரார்த்தித்துக் கொண்டு எல்லோருக்கும் ஆசி கூறுவார். ஸ்ரீமான் ஹெக்கடே அவர்கள் சொல்லும் பரிகாரத்திலும், அவர்கள் வார்த்தைகளிலும் பூர்ண திடநம்பிக்கை வைத்து பயம், பக்திசிரத்தையுடன் நடந்து கொண்டால் ஆண்டவன் அருள் கிடைத்து எல்லா குறைகளும், கஷ்டங்களும் பிரார்த்தனைகளும் நிறைவேறும். இம்மாதிரி பலன் கிடைத்து சௌகர்யமடைந்தவர்கள் கர்னடக பிராந்தியத்திலும் மைசூர் ராஜ்யத்திலும் பல்லாயிரக்கணக்கானவர்கள். மைசூர் மஹாராஜர்கூட இக்ஷேத்திரத்திற்கு வந்து பலனடைந்திருக்கிறார்.

இம்மாதிரி சமர்ப்பிக்கப்படும் ஹரிக்கை, காணிக்கை, முடிப்பு முதலிய பணத்தைக் கொண்டு கோயி

லில் நடைபெறும் பலவிதமான கைங்கர்யங்களுக்காக வும் ஸேவைகளுக்காகவும் தேவஸ்தான பரிபாலனத் துக்காகவும் உபயோகப்படுத்தப்படுகிறது. அதுமட்டு மின்றி தேவஸ்தான கட்டிடங்களை பராமரித்து புதிய நிர்மாணங்கள் முதலிய செய்யவும், பக்தகோடிகளின் சௌகர்யத்திற்காக பல வசதிகள் செய்யவும் உபயோ கப்படுத்தப்படுகிறது.

தவிர தானங்களில் சிறந்ததான அன்னதானம் அபயதானம், ஔஷத தானம், வித்யா தானம் என்ற நான்குவகைப்பட்ட தர்மங்கள் சிறப்பாக நடத்தப்படுகின்றது. ஸ்ரீமான் ரத்தினவர்மா ஹெக்க டே அவர்கள் பட்டத்துக்கு வந்தவுடன் தர்மஸ்தலம், சுமார் 90 வருஷகாலமாக விஜயம் செய்யாத ஸ்ரீ சிருங் கேரி சாரதாபீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் விஜயம்செய்து பகவானை தரிசித்து இங்கு நடக்கும் தான தர்மாதிகளைக்கண்டு புகழ்ந்து இக்கால த்தில் இவைகளை இவ்வளவு பக்திசிரத்தையுடன் நடத்திக்கொண்டுவரும் ஸ்ரீமான் ரத்தினவர்மா ஹெக் கடே அவர்களை ரொம்பவும் பாராட்டி அவருக்கு ராஜ மரியாதை செலுத்தி கௌரவித்து ஆசீர்வதித்துச் சென்றார்கள்.

ஹரிக்கை, காணிக்கை முதலியவைகள் நேரி லேயே கொண்டுவந்து செலுத்தப்பட வேண்டும். மற்றவர்களிடம் கொடுக்கக்கூடாது. இவைகளை வசூல் செய்வதற்காக இவ்விடமிருந்து ஆள் அனுப்பும் வழக்கமும் கிடையாது. மணியார்டர் மூல்யமாக அவை களை அனுப்பலாம். வாக்குதீர்மானம், பிரமாணம்,

துலாபாரம், ஹரிக்கை முதலியவைகளுக்கு ஸ்ரீமான் ஹெக்கடே அவர்களே தீர்மானம் சொல்லவேண்டும். அவர் இல்லை என்றால் இவைகள் நடைபெறாது. இது சம்பிரதாயமாக நடந்துவரும் கோயில் பத்ததி.

---

# யாத்ரீகர்களின் வசதிகளும் யாத்திரையின் முக்கியத்துவமும்.

இக்ஷேத்திரத்தில் யாத்ரீகர்கள் தங்குவதற்காக தர்மசத்திரங்களும், அதிதிவிடுதிகளும் இருக்கின்றன. யாதொரு தொந்திரவுமில்லாமல் மூன்று தினங்கள் வரை இவைகளில் இலவசமாக தங்கலாம். சாப்பாடு சத்திரத்திலேயே பிரதி தினம் எல்லாருக்கும் அளிக்கப் படுகிறது. அதில் இலவசமாகவே சாப்பிடலாம்.

இரண்டு மூன்று இடங்களில் தனித் தனியாக சமையல் நடக்கிறது. பிராம்மணர்களுக்கு பிரத்யேக மாக சத்திரம் உண்டு. சத்திரங்களில் சாப்பிட விரும் பாதவர்களுக்கு எல்லாவிதமான சாமான்களும், பாத் திரங்களும் மற்ற சமையல் செய்துகொள்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படும். இரவில் சாப்பிடாதவர்களுக்கு பலஹாரமும் கொடு க்கப்படும்.

யாத்ரீகர்களுக்கு உடல்நலம் குன்றியிருந்தால் அவர்களுக்கு இலவசமாக மருந்தும் சிகிச்சையும் செய்ய இலவச ஆஸ்பத்திரி ஒன்றும் இருக்கிறது. இது தவிர தர்மங்களும் வழங்கப்படுகின்றன.

இக்ஷேத்திரத்தில் வசிப்போர் பிள்ளைகள் கல்வி பயில ஒரு ஹயர் எலிமெண்டரி பள்ளிக்கூடமும், மலைஜாதியினர் மக்கள் படிக்க ஒரு பள்ளிக்கூடமும் இருக்கின்றன, இங்கு இங்கிலீஷ், கன்னடம், சம்ஸ் கிருதம் இவைகள் சொல்லிக் கொடுக்கப் படுகின்றன. மாணவர்களுக்கு புஸ்தகம், பலகை முதலியவைவையும் சாப்பாடும் இலவசமாக அளிக்கப்படுகின்றது.

யாத்ரீகர்களின் சௌகர்யத்திற்காக ஒரு கிளை போஸ்டாபீஸும், இருக்கிறது. நல்ல சுத்தமான பலஹாரங்கள் முதலியன தயார்செய்து விற்கும் பிராம்மண ஓட்டல்களும் பல கடைகளும், எல்லாவித மான சமான்களும் கிடைக்கக்கூடியதான ஒரு சிறிய கடைவீதியே இங்கு இருக்கிறது.

தேவஸ்தான . சம்மந்தப்பட்ட தேவதைகளுக் காக வேண்டிய எல்லாவிதமான சாமான்களும் ஸ்டாக் செய்துவைத்து தினந்தோறும் வினியோகம் செய்வ தற்காக " ஜமாஉக்ராணம் " என்ற ஸ்டோர் விடுதி ஒன்று இருக்கிறது.

பெரிய உத்யோகஸ்தர்கள் முதலியவர்கள் தங்கவும் பிரத்யேகமான இடவசதிகள் இருக்கின்றன. மற்றபடி ஸ்தல சுகாதாரம், ஜலசப்ளை, மராமத்துக்கள்

இவைகளை எல்லாம் கவனிக்க கிராம பஞ்சாயத்து கௌன்சில் ஒன்று இருக்கிறது.

பிரதிதினமும் இக்ஷேத்திரத்திலிருந்து பஸ் ஸர்வீஸ்களும், டாக்ஸி மோட்டார்களும் போக்குவரத்து சாதனங்களுக்கு மிகவும் உதவியாயிருக்கின்றன. ஆற்றில் அதாவது நேத்ராவதி நதியில் வெள்ளம் வந்து ரோடுபாதை அடைபட்டு விட்டால், நதியை கடப்பதற்கு "படகு" வசதிகளும் இருக்கின்றது. யாதொரு விதத்திலும் குறைவு இல்லாமல் எல்லாவித மான வசதிகளும் யாத்ரீகர்களுக்கு இக்ஷேத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது.

"எண்ணறிய பிறவிதனில் மானிடப் பிறவி அரிது" என்றபடி அநேக ஜன்மங்கள் பல வேஷங்களில் தோன்றி மறைந்து, செய்த புண்ணியத்தின் பயனாக இந்த மானிட ஜன்மம் நமக்கு கிடைத்தது. இந்த சரீரத்தில்தான் ஆண்டவன் நமக்கு பகுத்தறிவை கொடுத்திருக்கிறான். இதில் இருக்கும்போது தான் நாம் நம்மையறிந்து, ஈசனை அறிந்து, தியானம், தியாகம், வைராக்யம், யோகம் முதலிய ஞானங்களைப் பெற்று, அதன் மூல்யம் இறப்பு பிறப்பென்ற பிணியினின்றும் விடுபட்டு மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை எய்த முயல வேண்டும்.

இந்த சரீரமே நிலையற்றது என்றிருக்கும் போது, மற்ற கண்ணெதிரில் தோன்றும் எல்லா வஸ்துக்களும் அழிந்து போகக்கூடியவைகளே.

நம்மைச்சுற்றி காணப்படும் பந்து மித்ரர்கள், சொத்து சம்பத்துக்கள், பதவி பட்டங்கள் எல்லாம் நம் முன்னிருக்கும் ஜீவன் அல்லது ஆத்மாவுக்கு சம்மந்தப்படாதவைகள். அவைகள் யாவும் நமக்கு உதவியளிக்காதவைகள். "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே" என்ற ஆன்ரோர் வாக்குபடி கூடவருவது இவைகள் எல்லாம் அல்ல. அவனவன் இந்த ஜன்மத்தில் செய்த நல்விணே, தீவிணே (புண்ய கர்மங்கள் பாபகர்மங்கள்) இவைகளே நம்முடன் வருகின்றவைகள். தீவிணேகளே யெல்லாம் நாளுக்கு நாள் எறித்து நல்விணேகளேயே மனிதன் செய்ய முயலவேண்டும். அதற்காக திடமனதுடன் பிரயத்தனப்பட வேண்டும்.

மஹான்கள், மஹரிஷிகள், மஹாசித்தபுருஷர்கள் இவர்கள் எல்லாம் வாசம்செய்து சித்தியடைந்த புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும், பகவான் தன் லீலா விநோதத்தை பல ரூபங்களில் அநேக விதமாக காட்டியிருக்கும் பல பவித்திர க்ஷேத்திரங்களுக்கும், அறிஞர்கள், ஞானிகள், பெரியார்கள் இவர்கள் எல்லாம் சென்று தரிசித்து, அனுபவித்து பாடியிருக்கும் புகழ் பெற்ற க்ஷேத்திரங்களுக்கும், நாம் சென்று அங்கு இருக்கும் புண்ணிய தீர்த்தங்கள், நதிகள் இவைகளில் ஸ்நானம் செய்து, பகவானே தரிசித்து ஆழ்ந்த தியானத்துடனும், பக்தி சிரத்தையுடனும் தீர்த்தாடனம் செய்வதனுல், நம் உள்ளிலிருக்கும் பல தீயகுணங்கள் எல்லாம் நீக்கப்பெற்று, சன்மார்க்கத்திலும், ஞானமார்க்கத்திலும் போக உதவியளிக்கின்றன.

இம்மாதிரியான புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு வரும் போதே, பரிசுத்தமான பாவனைகளுடனும், ஆழ்ந்த பயபக்தியுடனும் புறப்பட வேண்டும். க்ஷேத்திரங்களில் இருக்கும்போதும் ரொம்ப பரிசுத்தமாகவும் ஸதா அவன் ஸேவை, அவன் தியானம், அவன் விசாரம், அவன் நாமஜபம் இவைகளையே அதிகமாகச் செய்யவேண்டும். மற்ற சௌகர்யங்கள் அசௌகர்யங்கள் இவைகளைப் பற்றி அதிகம் சிந்திக்கக்கூடாது. க்ஷேத்திரங்களில், பகவத்ஸேவை, பாகவத ஸேவை தான தர்மங்கள் இவைகள் எல்லாம் செய்தால் பலனுண்டு. எல்லாவற்றையும்விட உயர்ந்தது மனதையடக்கி சிந்தையை அவன்பால் செலுத்தி அவன் அருளையடைய யோக்கிதை சம்பாதிப்பதே நம் முக்கிய கடமையாகும். அதைச் செய்ய எல்லாம்வல்ல ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரஸ்வாமி அருள் புரிவாராக!

—: மங்களம் :—

# அனுபந்தம் 1

## வருஷாந்திர திருவிழாக்கள்.

1. லக்ஷதீப உத்ஸவம். :— இதுதான் இக்ஷேத்திரத்தில் நடக்கும் பெரிய உத்ஸவம். கார்த்திகை மாதம் கார்த்திகை பகுளதசமி யன்று ஆரம்பமாகி அமாவாசை வரையில் நடக்கும். எங்கு பார்த்தாலும் தீப அலங்காரம் செய்யப்பட்டு ஸ்வாமிக்கு உத்ஸவம் அதிவிமரிசையாக நடத்தப்படுகிறது. வெள்ளிரத உத்ஸவமும் ஆனந்தமாய் நடக்கும். இந்த உத்ஸவத்தின்போதுதான் "சர்வதர்ம ஸம்மேளனம்" என்ற வித்வத்சபையும் கூடுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பலபாகங்களிலிருந்தும் இந்த உத்ஸவத்திற்கு வருகிறார்கள்.

2. மேஷசங்கரமண ஜாத்ரா உத்ஸவம்:— இது தமிழ் நாட்டில் நடக்கும் பிரம்மஉத்ஸவத்தைப் போன்றது. சித்திரைமாதம் சங்கராந்திக்கு கொடியேறி 9 நாள் வரையில், தர்மதேவதைகளுக்கும் ஸ்ரீமஞ்சுநாதஸ்வாமிக்கும் உத்ஸவம் நடக்கும். வெள்ளிரத உத்ஸவமும் நடைபெறும். கடைசி தினம் தீர்த்தவாரி. ஸ்வாமி நேத்ராவதியாற்றுக்குச் சென்று தீர்த்தமாடுதல், விசேஷ பிராம்மண சந்தர்ப்பணைகளும் நடக்கும்.

3. நவராத்திரி உத்ஸவம் :— இது புரட்டாசிமாதம் நவராத்திரி ஆரம்பமுதல் ஒன்பது தினம் வரையில் அம்மன் சந்நதியில் விசேஷ பூஜை அலங்காரங்கள் எல்லாம் நடந்து கடைசிதினம் சுமங்கலி ஸ்த்ரீகளுக்கும், கன்யா பெண்களுக்கும் சேலேகள் வழங்கப்படுகின்றன.

4. சிவராத்திரி உத்ஸவம் :— இது தைமாதத்தில் மஹாசிவராத்திரி தினம் நடக்கிறது. விசேஷ தீப அலங்காரங்கள் செய்யப்பட்டு ஸ்வாமிக்கு விசேஷ அபிஷேகங்கள் இரவு பூராவும் நடைபெறும். அன்று இரவு ஸ்வாமி "சிவராத்திரி குன்று" என்று சொல்லப்படும் குன்றுக்குச் சென்று அங்கு பூஜை உத்ஸவம் வெகு சிறப்பாக நடக்கும்.

5. வஸந்த உத்ஸவம் :— இது சித்திரைமாத சங்ரமணமுதல் ஆரம்பமாகி "வஸந்தருது" பூராவும் வைகாசிமாதம்முடிய நடக்கிறது. பிரதி தினமும் ஸ்வாமிக்கு உத்ஸவம், சோடசோபசாரம் வஸந்தம் இவைகள் நடக்கும்.

6. மஹா நடாவளி உத்ஸவம் :— இது தர்மதேவதைகளின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் உத்ஸவம். இது வருஷா வருஷம் நடப்பதில்லே. பலவருஷங்களுக்கொருமுறை நடத்துவார்கள். உயர்ந்த முறையில் நடக்கும். அது வரும்சமயம் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

---

அனுபந்தம் 2

# ஆர்ஜித கட்டண விதிகள்.

ஶ்ரீ மஞ்சுநாதஸ்வாமிக்கு செய்யப்படும் ஸேவை.

| | | |
|---|---|---|
| 1. | பஞ்சாம்ருத அபிஷேகம். (ஏகாதசருத்ராபிஷேகம், ஸ்வர்ண புஷ்பம், பிரும்மார்ப்பணம் முதலியன.) | 16—0—0 |
| 2. | பில்வபத்ர அர்ச்சனை. | 2 8 0 |
| 3. | கற்பூர ஆறத்தி. | 1 4 0 |
| .4 | ஹரிவாண நைவேத்தியம். | 6 8 0 |
| 5. | க்ஷீராபிஷேகம். | 2 8 0 |

ஶ்ரீ அம்மன்வாருக்கு செய்யப்படும் ஸேவை.

| | | |
|---|---|---|
| 1. | பாமாண நைவேத்தியம். | 6—8—0 |
| 2. | கற்பூர ஆறத்தி | 1 4 0 |
| 3. | குங்குமார்ச்சனை. | 1 8 0 |

ஶ்ரீ கணபதிதேவருக்கு செய்யப்படும் ஸேவை.

| | | |
|---|---|---|
| 1. | துர்வார்ச்சனை. | 2—8—0 |
| 2. | பஞ்ச கஜ்ஜாயம். | 2 0 0 |
| 3. | மங்களார்த்தி. | 1 4 0 |

ஶ்ரீ அன்னப்பஸ்வாமிக்கு செய்யப்படும் ஸேவை.

| | | |
|---|---|---|
| 1. | பெல்லக்காய் நைவேத்தியம். | 3—0—0 |
| 2. | கற்பூர ஆறத்தி. | 1 4 0 |

# விசேஷ ஸேவைகள்.

## கட்டண விதிகள்.

ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரஸ்வாமிக்கு

| | | |
|---|---|---|
| 1. | பஞ்சாம்ருத அபிஷேகம். (ஷடருத்ராபிஷேகம்) | 108—0—0 |
| 2. | வெள்ளி பல்லக்கு உத்ஸவம். (கோயிலுக்குள் பிராகாரத்தில்) | 208—0—0 |
| 3. | வெள்ளி விமான உத்ஸவம். (தீப அலங்காரம்) | 408—0—0 |
| 4. | வெள்ளிவிமான நந்திவாகன் உத்ஸவம். (தீப அலங்காரம்) | 450—0—0 |
| 5. | வெள்ளிபல்லக்கு, வெள்ளிவிமானம் உத்ஸவம். (தீப அலங்காரம், பூந்தோட்டத்தில் வஸந்தம்) | 750—0—0 |
| 6. | பிராம்மண சந்தர்ப்பணே. 108 பிராம்மணர்களுக்கு போஜனம் எல்லா சந்நதியிலும் சாத்ரண ஸேவை, தக்ஷிணே ரங்கபூஜை, தீப உத்ஸவம், வெள்ளிபல்லக்கு உத்ஸவம், பூந்தோட்டத்தில் வஸந்தம். | 1025—0—0 |
| 7. | வெள்ளிரத உத்ஸவம், வஸந்த பூஜை, 108 பிராம்மணர்களுக்கு சந்தர்ப்பணே, தீப அலங்காரம் முதலியன. | 2000—0—0 |

## ஸ்ரீ அம்மன்வாருக்கு

| | | |
|---|---|---|
| 1. | பவமானபிஷேகம். | 108—0—0 |

## ஸ்ரீ கணபதிதேவருக்கு

| | | |
|---|---|---|
| 1. | மூடப்ப பூஜை. | 220—0—0 |

## பஸ்தி ஸ்ரீ சந்திரநாதஸ்வாமிக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பஞ்சாம்ருத அபிஷேகம். | 6—0—0 | | |
| 2. | ஷீராபிஷேகம். | 3 | 0 | 0 |
| 3. | 24 கலசாபிஷேகம், பூஜை தீப அலங்காரம். | 100 | 8 | 0 |
| | அம்மன்வாரு பூஜை. | 6 | 0 | 0 |

## கோயிலுக்குள் நடத்தப்படும் ஹரிக்கை "துலாபாரம்" கட்டண விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அரிசி. | 100—0—0 | | |
| 2. | அரிசி, தேங்காய். | 150 | 0 | 0 |
| 3. | வெல்லம், | 200 | 0 | 0 |
| 4. | சக்கரை. | 250 | 0 | 0 |
| 5. | தேங்காய். | 150 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | நெய். | 250 | 0 | 0 |
| 7. | சந்தணம். | 300 | 0 | 0 |
| 8. | சில்லரை நாணயங்கள். | 500 | 0 | 0 |
| 9. | தாம்பரம். | 500 | 0 | 0 |
| 10. | வெள்ளி. | 1000 | 0 | 0 |
| 11. | தங்கம், வெள்ளி. | 2000 | 0 | 0 |

தீர்ப்புகள் :— சத்தியம், பிரமாணம், சச்சரவு சம்மந்தப்பட்டவைகள். இவைகளுக்கெல்லாம் கிரமப்படி தீர்மானங்கள் சொல்லி பைசல் செய்யப்படும். கட்டணம் 5–0–0, 10–0–0, 20–0–0, 40–0–0, 50–0–0, 100–0–0.

நியாயஸ்தலம், கிராமபஞ்சாயத்து இவைகளில் பிரமாணம் செய்தது சம்மந்தமாக தீர்ப்பு காணிக்கை 24-0-0.

இந்த க்ஷேத்திர சம்மந்தமான மற்ற தேவையான விபரங்களுக்கும், யாத்ரீகர்களின் விருப்பங்களைப் பற்றியும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி கேட்டுக் கொள்ளவும்.

O93:38.21316.Tr N56


ஸ்ரீமான் D. ரத்தினவர்மா ஹெக்கடே,
தர்மஸ்தலம்.
( தென்கன்னடம் ஜில்லா. )

TAMIL NADU ARCHIVES MADRAS
113083

அசோகா பிரஸ், கோயமுத்தூர்.
*1956.*

பாக்குத்தூளின் சின்னம்.

என்றும்
ஆனந்தமளிப்பது




அசோகா
சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர்கள் :-
எம். கெ. கிருஷ்ண செட்டி,
கோயமுத்தூர்.